# கல்வியின் பண்புகள்

ஒரு முறை இறைத்தூதர் ﷺ அவர்கள் உபதேசம் செய்துகொண்டிருந்தார்கள். ஒரு நபித்தோழர் ஹஜ்ரத் அபூ ரிஃபாஅ (ர) அவர்கள் வந்து கூறினார்கள், இறைத்தூதரே ﷺ ஒரு அறிமுகமில்லாத அந்நியன் தன்னுடைய மார்க்கத்தைப்பற்றி ஒன்றுமே அறியாத நிலையில் தங்களிடம் அதனைப் பற்றிக் கேட்டுத்தெரிந்துகொள்ள விரும்புகிறான் என்றார்கள். இதனைக் கேட்டு இறைத்தூதர் ﷺ அவர்கள் அவரை நோக்கித்திரும்பி, தன்னுடை உபதேசத்தையும் நிறுத்திக்கொண்டார்கள் மற்றும் ஹஜ்ரத் அபூ ரிஃபாஅ (ர) அவர்களுக்கு மார்க்க விஷயங்களைப்பற்றி விளக்கிக்கூறினார்கள். அவர்கள் மார்க்கத்தைப்பற்றி முழுமையாக அறிந்துகொண்டபின், இறைத்தூதர் ﷺ அவர்கள் மீண்டும் தன் உபதேசத்தைத் தொடர்ந்தார்கள்.

இறைத்தூதர் ﷺ அவர்களுடைய மறைவுக்குப்பின் ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ர) அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்களுடைய பொன்மொழிகளைச் சேகரிப்பதில் தீவிரமாக ஈடுபட்டார்கள். இன்னவர் ஒரு நபிமொழியைப்பற்றி அறிவார் என்று எப்போது கேள்விபட்டாலும் அவர் உடனே அவருடைய வீட்டிற்குச் செல்வார், அவர் தூங்கிக்கொண்டிருக்கின்றார் என்று தெரிந்தால் அவருடைய கதவிற்கு வெளியே விழித்தெழும்வரை உட்கார்ந்துகாத்துக்கொண்டிருப்பார்கள், அவருடைய துணிகளில் தூசியும் அழுக்கும் படிந்துவிடும். சந்திக்கும்போது அந்த மனிதர் கூறுவார், அன்பரே, நீங்கள் ஏன் தேவையின்றி சிரமம் ஏற்றுக்கொண்டீர்கள், நீங்கள் கட்டளையிட்டிருந்தால் நானே உங்களிடம் வந்திருப்பேனே. அவர்கள் கூறுவார்கள், இல்லை, இல்லை, உங்களிடம் இறைத்தூதர் ﷺ அவர்களுடைய பொன்மொழி இருக்கின்றது, ஆகவே, என்னுடைய கடமை நான்தான் உங்களிடம் நடந்துவரவேண்டும் மற்றும் உங்களிடம் அதனைக்கேட்டு பெற்றுக்கொள்ளவேண்டும் (ஹாகிம்).

www.uzarfalahi.com

இஸ்லாத்தில் கல்வியின் அந்தஸ்து மிகவும் மகத்தானது. திருக்ஃகுர்ஆனில் முதன்முதலான வஹியாக அருளப்பட்ட வசனம் கல்வி கற்பதற்கான கட்டளையாகும் **(العلق:1)** ٱقْرَأْ بِٱسْمِ رَبِّكَ ٱلَّذِى خَلَقَ ﴿١﴾ பொருள்: *ஓதுவீராக, (நபியே), (உறைந்த) இரத்தக்கட்டியிலிருந்து மனிதனைப் படைத்த உம் இறைவனின் திருப்பெயர் கொண்டு (அல் அலஃக்:1).* அல்லாஹ் தஆலா சத்தியம் செய்யும்போது கல்வியைப்பற்றித்தான் சத்தியம் செய்தான்:

**(القلم: 1)** نٓ ۚ وَٱلْقَلَمِ وَمَا يَسْطُرُونَ ﴿١﴾ பொருள்: *நூன், எழுதுகோலின்மீது சத்தியமாக (அல் ஃகலம்:1).*

இதுபோன்றே நபிமொழிகளிலும் கல்விக்கு ஒரு மகத்தான முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. கல்வி கற்பதற்காகப் பயணமேற்கொள்வோருக்கு சுவர்க்கம் சென்றடைவதற்கான பாதை காண்பிக்கப்படுகின்றது. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ سَلَكَ طَرِيقًا يَلْتَمِسُ فِيهِ عِلْمًا سَهَّلَ اللَّهُ لَهُ طَرِيقًا إِلَى الجَنَّةِ

*பொருள்: எவர் கல்வி கற்பதற்காக ஒரு பாதையில் பயணமேற்கொள்வாரோ, அல்லாஹ் தஆலா அவருக்காக சுவர்க்கத்தின் பாதையை எளிதாக்கிவிடுகிறான் (புக்ஹாரி, அபூதாவூத், திர்மிதி)*

கல்வி என்பது எப்படிப்பட்டது என்றால், அதற்கான பிரதிபலன் மரணத்திற்குப்பின்பும் தொடர்ந்து கிடைத்துக்கொண்டே இருக்கும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு மனிதன் இறந்துவிட்ட பின் அவனுடைய நற்காருமங்கள் புரியும் வாய்ப்பு முடிவுக்கு வந்துவிடுகின்றது, இருப்பினும் மூன்று விதமான நற்செயல்கள் தொடர்ந்துகொண்டேயிருக்கின்றன, அவையாவன: முதலாவது, தொடந்து பயனளிக்கும் விதமான தானதர்மங்கள், இரண் டாவது: மக்கள் தொடர்ந்து பயனடைந்துகொண்டிருக்கும் வகையிலான கல்வியறிவு, மூன்றாவது, தங்களுடைய பெற்றோருக்காக இறைவனிடம் துஆ செய்துகொண்டிருக்கும் ஸாலிஹான பிள்ளைகள்.

إِذَا مَاتَ الْإِنْسَانُ انْقَطَعَ عَنْهُ عَمَلُهُ إِلَّا مِنْ ثَلَاثَةٍ: إِلَّا مِنْ صَدَقَةٍ جَارِيَةٍ، أَوْ عِلْمٍ يُنْتَفَعُ بِهِ، أَوْ وَلَدٍ صَالِحٍ يَدْعُو لَهُ (صحيح مسلم)

*பொருள்: ஒரு மனிதன் இறந்துவிட்டால் அவனுடைய அமல்களின் செயல்பாடு நின்றுவிடுகின்றது மூன்று விஷயங்களைத்தவிர, தொடரும் விதமான தானதர்மங்கள், இரண்டாவது: தொடர்ந்து மக்கள் பயனடைந்துகொண்டிருக்கும் வகையிலானகல்விப்பணி, மூன்றாவது, தங்களுடைய பெற்றோருக்காக இறைவனிடம் துஆ செய்துகொண்டிருக்கும் ஸாலிஹான பிள்ளைகள்.*

கல்வி கற்பதில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருப்போரை மலக்குகள் தங்கள் இறக்கைகளால் போர்த்திப்பாதுகாக்கின்றனர். ஹஜ்ரத் ஸஃப்வான் பின் அஸ்ஸால் அல் மராவி (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், நான் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் வந்தேன், அப்போது அவர்கள் மஸ்ஜிது நபவியில் சாய்ந்து அமர்ந்துகொண்டிருந்தார்கள், அவர்கள்மீது ஒரு சிகப்பு நிறமான போர்வை இருந்தது. நான் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் கூறினேன், இறைத்தூதரே ﷺ நான் கல்வி கற்பதற்காக வந்துள்ளேன், அவர்கள் ﷺ கூறினார்கள், நல்வரவாகட்டும், கல்வி கற்பவர்களை மலக்குகள் தங்கள் இறக்கைகளைக்கொண்டு போர்த்திப்பாதுகாக்கின்றனர்.(தபரானி)

கல்வி இரண்டு விதமானது. அதில் ஒரு கல்வியானது எப்படிப்பட்டது என்றால் ஒரு முஸ்லிம் அதன் தேவையற்றவனாக இருக்கவே முடியாது. அது அவனுடைய மார்க்கக்கல்வியாகும், இதனைக்கொண்டு அவன் தன்னுடைய இரட்சகனைப்பற்றி அறிந்துகொள்கிறான், அவனுடைய நபியான இறைத்தூதர் ﷺ அவர்களின் வாழ்க்கை முறையைப்பற்றி அறிந்துகொள்கிறான், மார்க்க விஷயங்களைப்பற்றித் தெரிந்துகொள்கிறான். இவ்விதமான கல்வியை ஃபர்ஜ்து ஐன், ஒருவர் மீதான கட்டாயக்கடமையாகக் கருதப்படும்.

மற்றொன்று சிலர் மட்டும் அறிந்திருப்பது போதுமானது மற்றும் அதில் திறமைபெற்றிருப்பதும் இன்றியமையாத, தவிர்க்கமுடியாத ஒன்று. உதாரணமாக, கைத்தொழில் மற்றும் உற்பத்தி சார்ந்த கல்வி, விவசாயம் சார்ந்த கல்வி மற்றும் மருத்துவக்கல்வி ஆகியன.

கல்வியின் மூலமாக மட்டுமே நாம் அல்லாஹ்வைப்பற்றிய உண்மையான அறிவினைப்பெறமுடியும். இதன் காரணமாகவேதான் கல்வியறிவு உள்ளவர்கள் அல்லாஹ்வை அதிகம் அஞ்சுபவர்களாக இருக்கின்றனர். திருக்ஃகுர்ஆன் கூறுகிறது: **(الفاطر: 28)** إِنَّمَا يَخۡشَى ٱللَّهَ مِنۡ عِبَادِهِ ٱلۡعُلَمَٰٓؤُاْۗ ﴿٢٨﴾ பொருள்: *உண்மையில் அவனுடைய அடிமைகளில் ஞானமுடையவர்கள் மட்டுமே அல்லாஹ்வை அஞ்சுபவர்களாவர் (அல் ஃபாதிர்:28)*

**கல்வீ கற்பவர்கள் மேற்கொள்ளவேண்டிய சில ஒழுக்கங்கள் உள்ளன, அவை பேணப்படவேண்டும்:**

**மனத்தூய்மை:** கல்வி கற்க முற்படும் நிலையில் முதன்மையானஒன்று மனத்தூய்மையாகும். கல்வி கற்பதற்கான குறிக்கோள் ஒருவர் தன்னைக் காட்டிக்கொள்ளவேண்டும் என்றோ பிரபலப்படுத்தவேண்டும் என்றோ இருக்கக்கூடாது. மேலும், அதிகமான மார்க்கக்கல்வியினைக்கற்று, குறைந்த அறிவாற்றலுள்ள நேர்மையான மனிதர்கள்மீது தம் செல்வாக்கை ஆக்கிக்கொள்ளவேண்டும் என்றோ இருக்கக்கூடாது. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: إِنَّمَا الأَعْمَالُ بِالنِّيَّاتِ،وَإِنَّمَا لِكُلِّ امْرِئٍ مَا نَوَى பொருள்: அமல்கள் அனைத்தும் அதற்கான குறிக்கோளைப் பொருத்தே அமைகின்றன, ஒவ்வொருமனிதனுக்கும் அவனுடைய எண்ணத்திற்கேற்பவே (பிரதிபலன்) கிடைக்கும்.**(متفق عليه)**

இறைத்தூதர் ﷺ அவர்கள் உம்மத்தினருக்கு நரகத்தில் முதலில் செல்பவன் யார் என்பதைப்பற்றிக் கூறியுள்ளார்கள், அவர்கள் ﷺ கூறுகிறார்கள்: தானும் மார்க்கக்கல்வியைக்கற்று மற்றவர்களுக்கும் கற்பித்த ஒருவனும்

www.uzairfalahi.com

திருக்ஃகுர்ஆனைக் கற்றறிந்த ஒருவனும் கொண்டுவரப்படுவான். அல்லாஹ் தன்னுடைய அருட்கொடைகளை அவனுக்குமுன் எடுத்துக்கூறுவான், அவனும் அதனை ஒப்புக்கொள்வான், பின்பு அல்லாஹ் கேட்பான் இதனைக் கொண்டு நீ என்ன செய்தாய்? அவன் கூறுவான் நானும் கல்வி கற்றேன் மற்றவர்களுக்கும் கற்பித்தேன், மேலும், உன் திருப்பொருத்தத்திற்காக திருமறையும் ஓதி வந்தேன். அல்லாஹ் கூறுவான், இல்லை நீ பொய் கூறுகிறாய். நீ எதற்காகக் மார்க்கக்கல்வி கற்றாய் என்றால் மக்கள் உன்னை ஆலிம் என்று கூறவேண்டும் என்பதற்காக, நீ திருக்ஃகுர்ஆனைக் கற்றது மக்கள் உன்மை ஃகாரி என்று கூறவேண்டும் என்பதற்காகவே, அவ்வாறு உலகில் நீ அழைக்கப்பட்டுவிட்டாய். பின்பு அவனை இழுத்துச்சென்று முகங்குப்புற நரகத்தில் போட்டுவிடுமாறு தீர்ப்பளிக்கப்பட்டு அவ்வாறே தள்ளப்பட்டுவிடுவான் (முஸ்லிம்)

### பயன் தரும் கல்வி கற்றல்

இறைத்தூதர் ﷺ அவர்கள் கேட்ட ஒரு பிரபலமான துஆ உண்டு, இறைவனே, நான் எந்த பலனும் அளிக்காத கல்வியிலிருந்தும், ஏற்றுக்கொள்ளத் தகாத அமல்களிலிருந்தும், கேட்கப்படாத துஆவிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்பு தேடுகிறனே் (அஹ்மத், இப்னு ஹிப்பான், ஹாகிம்)

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ عِلْمٍ لَا يَنْفَعُ، وَمِنْ عملٍ لَا يُقْبَلُ، وَمِنْ دُعَاءٍ لَا يُسْمَعُ

கல்வி பற்றிய விஷயத்தில் கூறப்படுவது யாதெனில், ஒரு மாணவன் தன்னை முழுமையாகவே அதற்கான பாதையில் ஈடுபடுத்திக்கொள்ளாத வரையில் அதில் எதுவும் அவன் அடைந்துவிட முடியாது. நம் முன்னோர்கள் கல்விக்கு மகத்துவம் அளித்துவந்தனர், அதற்காகவே தங்களுடைய நேரத்தை செலவழித்தனர். கல்வி கற்பதற்காக ஸ்திரத்தன்மை தேவையானது, அதற்காக செயல்களில் தொடர்ச்சியும் நிரந்தரமாகவே செயல்படுவதும் மிகவும் தேவையானது, ஏனெனில், மனிதனுடைய வயது குறைவானது மற்றும் கல்வி என்பது ஒரு கரையில்லா மகாசமுத்திரமாகும். இதன் காரணமாகவேதான் தொட்டில் முதல் கல்லறைவரை கல்வி கற்றுக் கொண்டிரு என்ற பழமொழி பிரபலமாக உள்ளதுபோலும்.

### உளவியல் கல்வி மனிதனுடைய தீய பண்புகளைத் தூய்மைபடுத்தும் வலுவான ஆதாரம்:

இது அல்லாஹ்வின் பிரகாசமான நூர், இதனை அல்லாஹ் தன்னுடைய ஸாலிஹான இறையச்சமுடைய அடியார்களுக்கு மட்டுமே அளிக்கின்றான். ஆகவே, ஒரு முஸ்லிம் மாணவன் தன்னுடைய மனநிலை மாசுபடிவதிலிருந்து பாதுகாத்துக்கொள்ளவேண்டும் மற்றும் தீய பண்புகளான

பொறாமை, மற்றவர்களுக்குக் காட்டிக்கொள்வது, கர்வம் ஆகியவற்றி லிருந்து முடிந்த அளவிற்கு ஒதுங்கியிருக்கவேண்டும்.

**சிறுவயதில் கல்வி கற்பது மிகவும் பயனுள்ளது**

சிறு வயதில் ஒருவனுடைய மூளை மிகவும் தெளிவானதாக இருக்கும், இந்த வயதில் கற்கும் கல்வி கல்வெட்டுகளின் வரைவுகள்போன்று உறுதி யாக மனதில் பதிந்துவிடும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: எந்த சிறுவன் சிறுவயதிலிருந்தே கல்வி கற்பதிலும் இறைவணக்கத்திலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வளர்ந்து பெரியவனாகிறானோ அவனுக்கு அல்லாஹ் தஆலா மறுமையில் ஸித்தீஃகீன்களைப்போன்று சிறந்த பிரதி பலனை அளிப்பான். (தபரானி). மற்றொரு அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது, ஹஜ்ரத் ஃகபீஸா பின் மக்ஹாரிஃக் (ர) அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்க ளிடம் வந்தார்கள். இறைத்தூதர் ﷺ அவர்கள் கேட்டார்கள் எதற்காக வருகை தந்தீர்கள்? ஹஜ்ரத் ஃகபீஸா (ர) அவர்கள் கூறினார்கள், இறைத் தூதரே ﷺ நான் கிழவனாக ஆகிவிட்டேன், என்னுடைய எலும்புகளும் வலுவிழந்துவிட்டுள்ளன. இப்பொழுது தாங்கள் எனக்கு அல்லாஹ் நற் பலனை அளிக்கும் விதமான சில விஷயங்களைக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறேன். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், ஃகபீஸா (ர) அவர்களே, இதற்காக நீங்கள் எந்த வழியாக வந்துள்ளீர் களோ அதிலுள்ள தூசிகளின் துணுக்குகள் ஒவ்வொன்றும் அவ்வழியி லுள்ள ஒவ்வொரு இலையும் உங்களுக்காக பாவமன்னிப்புக் கேட்டுக் கொண்டிருந்தன. ஃகபீஸா (ர) அவர்களே, நீங்கள் ஃபஜ்ரு தொழுகைக் குப்பின் سُبْحَانَ اللّٰهِ الْعَظِيْمِ وَبِحَمْدِهِ என்று மூன்றுமுறை ஓதிக்கொள்ளுங்கள், நீங்கள் குருட்டு, குஷ்டம் மற்றும் தொழுநோயிலிருந்து பாதுகாக்கப்படு வீர்கள். ஃகபீஸா (ர) அவர்களே, உம்முடைய இரட்சகனிடம் இந்த துஆவைக் கேட்டுக்கொண்டிருங்கள்:

اللهُمَّ إِنِّي أَسْأَلُكَ مِمَّا عِنْدَكَ، وَأَفِضْ عَلَيَّ مِنْ فَضْلِكَ، وَانْشُرْ عَلَيَّ رَحْمَتَكَ، وَأَنْزِلْ عَلَيَّ، مِنْ بَرَكَاتِكَ

*பொருள்: அல்லாஹ்வே, நான் உன்னிடம் இருப்பவற்றிலிருந்து உன்னி டமே கேட்கின்றேன், நீ என்மீது கருணை காட்டுவாயாக, உன் கருணை என்மீது பொழிவாயாக, உன் அருட்கொடைகளை என்மீது இறக்கியருள் வாயாக.*

**உண்மையில் கல்வி கற்க முற்படுபவனுக்கு உலக ஈடுபாடுகள் தடையாக இருப்ப தில்லை:**

நபித்தோழர்கள் தங்களுடைய மற்ற ஈடுபாடுகளுடன் மீதமுள்ள நேரங் களில் கல்வி கற்பார்கள். ஃகுர்ஆன் மற்றும் நபிமொழிகளைக் கற்றுக்கொள்

www.uzaifalahi.com

வதற்காக இரவிலும் விழித்திருப்பார்கள். ஹஜ்ரத் அபூ சயீத் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், நாங்கள் போர்க்காலங்களின் செல்லும்போது ஓரிரு தோழர்களை இறைத்தூதரிடமிருந்து உபதேசங்களான நபிமொழிகளைக் கேட்கும் வகையில் விட்டுச்செல்வோம். திரும்பி வந்தபின் அவர்கள் எங்களுக்கு நபிமொழிகளை எடுத்துக்கூறுவார்கள், பின்பு நாங்களும் அதே நபிமொழிகளை இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள் என்று மற்றவர் களுக்கு எடுத்துக்கூறுவோம் (அசாகிர்). இதிலிருந்து ஹலாலான சம்பாத னைக்காக உழைப்பது மற்றும் கல்வி கற்பதற்காக முயற்சிசெய்வது ஆகிய வற்றில் எந்தத் தடங்கலும் இருப்பதில்லை என்பது தெளிவாகிறது. கல்வி கற்பதில் பொறுமையை மேற்கொள்வது மிகவும் முக்கியம். கல்வி கற்ப தற்காக மேற்கொள்ளும் பாதை கடினமானது என்பதில் ஐயமில்லை, அதற்கான வழியில் எதிர்கொள்ளும் இடையூறு மற்றும் இன்னல்களைச் சமாளிப்பதில் பொறுமை ஒரு ஆயுதமாகும். யார் இந்த ஆயுதத்தைப் பெற்றிருக்கவில்லையோ அவர் கல்வியையும் பெறமாட்டார். இதனால் தான் கூறப்படுகிறது, யார் கல்வி கற்பதில் பொறுமை கொள்ளவில் லையோ அவர்கள் வாழ்நாள் முழுவதும் இழிவையே அனுபவித்துக் கொண்டிருக்கவேண்டும்.

www.ijazirfalahi.com

### படிப்படியாக முன்னேறுதல்

கல்வி கற்பதில் படித்தரநிலையைக் கடைபிடிப்பது இன்றியமையாதது. கல்வி கற்பது என்பது துவக்க நிலையிலான அம்சங்களைக்கொண்டிருக் கும். கலைகளில் ஆழ்ந்த நிலைகளை அடைவது பின்புதான் ஏற்படும், இதற்கான சிறந்த வழிகாட்டுதல் ஒரு அனுபவமிக்க ஆசிரியர்தான் அளிக்க முடியும். ஒரு சிறந்த மாணவன் படிப்படியாக கல்வியின் பல்வேறு கட்டங் களைக் கடக்கின்றான், தொடர்ந்து கல்வி கற்றுவரும் நிலையில் ஒரு கட் டத்தில் அவன் அனைத்துத் துறைகளிலும் கைத்தேர்ந்தவனாக ஆகிவிடு கிறான்.

### நிபுணத்துவம்

ஒரு முஸ்லிம் கல்வியில் ஒரு குறிப்பிட்ட துறையில் நிபுணராக திகழ விரும்பினால், அவர் அனைத்திலும் சிறந்த, அதிகப் பயனுள்ள ஒரு துறை யினைத்தேர்ந்தெடுக்கவேண்டும். இவ்விஷயத்தில் அவர் தன்னுடைய தனிப்பட்ட இயல்புகள் மற்றும் விருப்பார்வங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். நீங்கள் ஒரு அறிஞராக விரும்பினால் அனைத்துக் கலைகளை யும் கற்றுக்கொள்ளவேண்டும் என்றும், ஒன்றையும் விட்டுவிடக்கூடாது என்றும் கூறப்படுகின்றது. ஆனால், நீங்கள் ஒரு நிபுணராக விரும்பினால், கல்வியின் ஒரு துறையை மட்டும் தேர்ந்தெடுங்கள், மற்ற எதனைப்பற்றி யும் கவலைப்படாதீர்கள் என்று கூறப்படுகிறது.

## ஞாபகத்தில் வைத்தல்

கல்வி கற்பதில் ஆழ்ந்த சிந்தனையும் ஞாபகத்தில் வைப்பதும் மிகவும் சிறந்ததாகவும் விரும்பத்தக்கதாகவும் இருக்கவேண்டும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

نَضَّرَ اللَّهُ امْرَأً سَمِعَ مِنَّا حَدِيثًا فَحَفِظَهُ حَتَّى يُبَلِّغَهُ غَيْرَهُ، فَرُبَّ حَامِلِ فِقْهٍ إِلَى مَنْ هُوَ أَفْقَهُ مِنْهُ، وَرُبَّ حَامِلِ فِقْهٍ لَيْسَ بِفَقِيهٍ

*பொருள்: நம்மிடமிருந்து ஒரு விஷத்தைக்கேட்டு மற்றும் அதனை ஞாப கத்தில் வைத்து மற்றவர்களிடம் எடுத்தரைத்தவனை அல்லாஹ் மகிழ்ச்சி யும் சுகமும் அளிக்கட்டும், ஏனெனில், மற்றவர் அவரை விடவும் கவன மாக இருக்கக்கூடும் மற்றும் ஒவ்வொருவரும் அறிவாற்ற லுடையவராக இருக்கமாட்டார்கள்.(*திர்மிதி*)*

## கவனத்தில் கொள்ளுதல்

கல்வி எழுத்து வடிவில் பாதுகாக்கப்படும் என்று கூறுவார்கள். மேலும், கல்வி வேட்டைப்பொருள் என்றும் அதனை எழுதிவைப்பது அதனுடைய சங்கிலி என்றும் கூறப்படும். ஓவ்வொரு மாணவனும் தான் கற்றுக் கொண்டதை மறந்துவிடும் அபாயமில்லாதிருக்கும் வகையில் அதனை எழுதி வைத்துக்கொள்வது இன்றியமையாதது. கற்றறிந்தவற்றை எழுதி வைத்துக்கொள்வதிலும் சில அடிப்படைகள் உள்ளன, அவையாவன: கேள்விபடும் ஒவ்வொன்றையும் சேகரித்துவைப்பதைத்தவிர்த்து தேர்ந் தெடுக்கப்பட்ட சிலவற்றை மட்டும் எழுதிவைப்பது. ஒரு அறிஞரிடம் மூன்று விதமான மாணவர்கள் வருவார்கள் என்று கூறுவார்கள், முதலாவது தான் எதனையெல்லாம் கண்டாரோ அதனை வைத்துக்கொள்ளுதல், இரண்டாவது வகை எல்லாவற்றையும் கேட்டு எதனையும் எழுதிவைக்கா திருத்தல், மூன்றாவது அதனை ஆய்ந்தறிந்து எழுதிவைத்தல். இவ்விதமான முறைதான் மூன்றிலும் சிறந்தது.

## கலந்துரையாடல் மற்றும் சரிபார்த்தல்

ஹஜ்ரத் முஆத்ஜ் பின் ஜபல் (ர) அவர்கள் கூறுகிறார்கள், மக்களே, கல்வி கற்றுக்கொள்ளுங்கள், ஏனெனில், அல்லாஹ்வுக்காக அதனைக் கற்றறிவது இறைவனைஅஞ்சுவதாகும்,அதனைப்பெறுவது இபாதத்தாகும்,அதனைப் பற்றி உரையாடுவது இறைவனைப் புகழும் தஸ்பீஹ் ஆகும் அதனைத் தேடி அதில் ஈடுபடுவது ஜிஹாத் போன்றதாகும். மேலும், அதனை அறியா தவர்களுக்குக் கற்பிப்பது ஸதஃகாவாகும், அதனைக் கற்போருக்காக செலவுசெய்வது இறை நெருக்கத்திற்கு வழிவகுக்கக்கூடியதாகும்.

www.uzairfalahi.com

## கல்வி கற்பதற்காக நேரத்தை நெறிப்படுத்துதல்

கல்விகற்பதற்கு நேரத்தை ஒதுக்குவது என்பது சிந்தித்துச்செயல்படாதவரை இயலாது. இதனைப் பயனுள்ளதாகவும் முற்றுப்பெறச்செய்வதற்கும் காலத்தை நிர்ணயித்து ஒதுக்குவது இன்றியமையாதது. ஒரு முஸ்லிமுடைய ஒவ்வொரு செயலும் முறையானதாகவும் காலத்தையொட்டியே இருக்கும். இரவு பகலில் ஐவேளைத்தொழுகை அதற்கான ஒரு சிறந்த உதாரணமாகும். அறிவியல் மற்றும் கல்வி கற்பதிலும் இதனைக்கவனத்தில் கொள்ள வேண்டும்.

## கல்வி கற்பதில் வெட்கப்பட்டால் நாம் பெறும் கல்வியே முறையற்றதாக ஆகிவிடும்

அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

فَسْـَٔلُوٓاْ أَهْـلَ ٱلذِّكْرِ إِن كُنتُمْ لَا تَعْلَمُونَ ﴿٤٣﴾ (النحل: 43)

பொருள்: *நீங்கள் அறியாதவர்களாய் இருந்தால் அறிவு வழங்கப்பட்டவர்களிடம் கேட்டுத்தெரிந்துகொள்ளுங்கள் (அந் நஹ்ல்: 43)*

ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் கூறுகிறார்கள், அன்சாரியப் பெண்கள் எவ்வளவு சிறந்தவர்கள். மார்க்கக் கல்வி மற்றும் விஷயங்களை ஆய்ந்தறிவதில் அவர்களுக்குக் கூச்சம் ஒரு தடையாக இருப்பதில்லை. ஒரு முஸ்லிமுடைய அடையாளம் அவன் மேலும் அறிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகக் கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருப்பான். ஒன்றை அறிந்துகொள்வதற்காக கல்வியறிவு படைத்தவர்களிடம் கேட்டுத்தெரிந்துகொள்வதில் அவன் வெட்கப்படமாட்டான், ஏனெனில், அவன் கல்வி ஒரு பொக்கிஷம் என்றும் அந்தப் பொக்கிஷத்தின் சாவி கேள்விகேட்பது என்பதை நன்கறிவான்.

## கல்வி கற்பதற்காக முயற்சிகளை மேற்கொள்ளுதல்

ஹஜ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ர) அவர்கள் கூறுகிறார்கள், ஒருவரிடம் ஒரு நபிமொழி பாதுகாப்பாக உள்ளது என்று நான் அறிந்தேன், அவரை சந்திக்க முடிவுசெய்தேன். பயணத்திற்காக ஒரு ஒட்டகத்தை விலைக்கு வாங்கினேன். ஒரு மாதகாலப் பயணத்தை மேற்கொண்டு சீரியா நாடு சென்றடைந்தேன். அங்கு சென்றபின் அவர் அப்துல்லாஹ் பின் அனீஸ் (ர) என்று தெரியவந்தது. அங்கிருந்த பணியாளிடம் ஜாபிர் (ர) வாயிலில் நின்றுகொண்டிருப்பதாகச் சென்று சொல்லும்படி கூறினார். உள்ளிருந்து குரல் கேட்டது எந்த ஜாபிர், அப்துல்லாஹ்வின் மகனாரா? நான் உடனே பதில் கூறினேன், ஆம். அவர் உடனே ஆடைகளை சரிசெய்துகொண்டு வெளியே வந்தார். நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் அரவணைத்தக் கொண்

www.tazfafalahi.com

டோம். நான் கூறினேன், நீங்கள் இறைத்தூதர் ﷺ அவர்களிடமி ருந்து ஃகிஸாஸ் பற்றிய ஒரு நபிமொழியினைக் கேட்டுள்ளீர்கள். எனக்கு அச்சம் ஏற்பட்டுவிட்டது நானோ அல்லது நீங்களோ மரணித்துவிடலாம், இந் நிலையில், நான் இந்த நபிமொழியினை அறியாதவானகவே இருந்து விடுவேன் என்று. அதன்பின் ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் அனீஸ் (ர) அவர் கள் அந்த ஹதீத்ஸை எடுத்துரைத்தார்கள் (அஹ்மத், திப்ரானி)

இதுபோன்றே, ஹஜ்ரத் உபைதுல்லாஹ் பின் ஃஅதீ (ர) அவர்கள் கூறுகிறார் கள், ஹஜ்ரத் அலி (ர) அவர்கள் ஒரு நபிமொழியைப்பற்றி அறிவதாகக் கேள்விபட்டேன். அவர்கள் மரணித்துவிட்டால் அந்த ஹதீத்ஸை நான் வேறு யாரிடமும் கேட்டறிந்துகொள்ளமுடியாது என்று அச்சம் கொண் டேன். ஆகவே, நான் புறப்பட்டு ஈராக் நாட்டிற்கு அவரிடம் சென்றேன் (க்ஹத்தீப்)

இதுபோன்றே, ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ர) அவர்கள் கூறுகி றார்கள், இறைத்தூதர் மீது அருளப்பட்டவற்றை அதிகமாக அறிந்தவர் ஒருவர் இருக்கின்றார் என்றும் ஒட்டகத்தின்மீது சவாரிசெய்து அவரிடம் சென்றடையலாம் என்றும் எனக்குத் தெரியவருமானால் நான் என்னுடைய மார்க்க அறிவை பெருக்கிக்கொள்வதற்காக அவரிடம் நிச்சயம் செல்வேன் (இப்னு அசாகிர்)

இமாம் ஷஃஅபி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் எந்த ஒரு மனிதரும் கல்வி மற்றும் ஞானத்தின் ஒரு விஷயத்தைக் கேட்டறிவதற்காக வடக்கு சீரியா நாட்டிலிருந்து எமன் நாட்டின் கீழைப்பகுதிக்குப் பயணம் மேற்கொண் டால் அவருடைய அந்தப் பயணம் வீணானது என்று நான் கருதவே மாட் டேன்.

www.uzairfalahi.com

**கற்ற கல்விக்கேற்ப அமல் செய்தல்**

கல்வியைக் கற்றறிந்து அதன்படி அமல் செய்யாதவர்களைப்பற்றி அல்லாஹ் கண்டனம் செய்கின்றான், இப்படிப்பட்டவர்களை அல்லாஹ் தம் முதுகில் மார்க்க நூல்களைச் சுமந்து செல்லும் கழுதைகளுடன் ஒப்பிட்டுக்கூறியுள் ளான். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

مَثَلُ ٱلَّذِينَ حُمِّلُوا۟ ٱلتَّوْرَىٰةَ ثُمَّ لَمْ يَحْمِلُوهَا كَمَثَلِ ٱلْحِمَارِ يَحْمِلُ أَسْفَارًۢا ۚ بِئْسَ مَثَلُ ٱلْقَوْمِ ٱلَّذِينَ كَذَّبُوا۟ بِـَٔايَـٰتِ ٱللَّهِ ۚ وَٱللَّهُ لَا يَهْدِى ٱلْقَوْمَ ٱلظَّـٰلِمِينَ ﴿٥﴾ (الجمعة: 5)

பொருள்: எந்த மனிதர்கள்மீது தவ்ராத் சுமத்தப்பட்டதோ, பின்னர் அவர் கள் அதன் பொறுப்பை ஏற்றுச்செயல்படவில்லையோ அந்த மனிதர்களின்

*உதாரணம் வேதங்களைச் சுமக்கின்ற கழுதையைப்போன்றதாகும் (அல் ஜுமுஅஹ்)*

*மற்றொரு இடத்தில் அல்லாஹ் தஆலா கூறுகிறான்:*

**أَتَأْمُرُونَ ٱلنَّاسَ بِٱلْبِرِّ وَتَنسَوْنَ أَنفُسَكُمْ وَأَنتُمْ تَتْلُونَ ٱلْكِتَٰبَ ۚ أَفَلَا تَعْقِلُونَ ﴿٤٤﴾ (البقرة: 44)**

*பொருள்: மற்ற மனிதர்களை நன்மை செய்யும்படி ஏவிவிட்டு, உங்களையே நீங்கள் மறந்துவிடுகின்றீர்களா? நீங்கள் வேதத்தை ஓதித்துக்கொண்டு தானேஇருக்கின்றீர்கள்.இதனைப்பற்றிநீங்கள்சிறிதும்சிந்திப்பதில்லையா*

ஒரு முஸ்லிம் மறுமையில் இன்றைய உலக வாழ்க்கையைப்பற்றிக் கேள்வி கேட்கப்படும் என்ற நம்பிக்கை கொண்டவன். இறைத்தூதர் ﷺ அவர்களுடைய ஒரு நபிமொழியில் கூறப்பட்டுள்ளது, மறுமை நாளில் ஒரு அடியான் தன்னுடைய வாழ்க்கையை எவ்வாறு கழித்தான், தான் கற்ற கல்வியைக்கொண்டு என்ன செய்தான், பொருளை எவ்வழியில் சம்பாதித்தான் எங்கு செலவு செய்தான், தன் உடலையும் சக்திகளையும் எங்கு ஈடுபடுத்தினான் என்பதைப்பற்றிக் கூறாதவரையில் அங்கிருந்து அவனுடைய பாதத்தை அசைக்கவும் முடியாது.

**لَا تَزُولُ قَدَمَا عَبْدٍ يَوْمَ القِيَامَةِ حَتَّى يُسْأَلَ عَنْ عُمُرِهِ فِيمَا أَفْنَاهُ، وَعَنْ عِلْمِهِ فِيمَ فَعَلَ، وَعَنْ مَالِهِ مِنْ أَيْنَ اكْتَسَبَهُ وَفِيمَ أَنْفَقَهُ، وَعَنْ جِسْمِهِ فِيمَ أَبْلَاهُ**

### ஆசிரியர்களைக் கண்ணியப்படுத்துதல்

ஒரு ஆசிரியர் மாணவனுடைய ஆன்ம ரீதியிலான தகப்பனாகக் கருதப்படுவார், அவருடன் கண்ணியமாகவும் ஒழுக்கப்பபண்புடனும் நடந்துகொள்வது ஒரு மாணவனுக்கு அருமருந்தாகக் கருதப்படுகின்றது. கல்விக்கூடங்களாகிய பட்டணத்தில் ஒரு ஆசிரியருடைய வழிகாட்டுதலின்றி ஒருவரால் நுழைய முடியாது. ஓவ்வொரு பிரபலமான மாணவனுக்குப்பின்னும் நாம் வரலாற்று ஏடுகளில் பார்ப்போமேயானால் நிச்சயம் ஒரு ஆசிரியர் அதற்குக் காரணமானவராக இருப்பார். ஒரு ஆசிரியருடைய நல்லாசியைப் பெறுவது நிச்சயம் அவரைக் கண்ணியப்படுத்துவது மற்றும் அவருடன் ஒழுக்கப் பண்புடன் நடந்துகொள்வது மூலமாக மட்டுமே இயலும்.

### செவிசாய்த்துக் கேட்டறிதல்

*ஹஜ்ரத் ஹசன் பின் அலி (ர) அவருடைய மகனாருக்கு அறிவுரைகூறும் வகையில் கூறுகிறார்கள்: என்னருமை மகனே, நீ அறிஞர்களுடைய அமர்வு*



www.uzairfalahi.com

களில் உட்காரும்போது அவர்கள் சொல்வதைப்பார்த்துக்கொண்டிருப்பதை விட்டுவிட்டு அதனைக் கேட்பதில் அதிகம் கவனம் செலுத்தவேண்டும். நீ அமைதியுடன் இருப்பதை எவ்வாறு கற்றுக்கொண்டாயோ அதைவிடவும் சிறந்த விஷயங்களைக்கேட்கும் பண்பினை உனக்குள் உண்டாக்கிக்கொள். ஒரு மாணவன் கேள்விகளைக்கேட்பது அவனுடைய உரிமையாகும், இருப்பினும், அதே சமயம் அவன் கேள்விகேட்பது மேலும் கூடுதலான கல்வியைப்பெறும் நோக்கத்துடனானதாக இருப்பது இன்றியமையாததாகும். தேவையற்ற, தாறுமாறான வாதமாகவோ ஆசிரியரைத் தொந்தரவு செய்யும் நோக்கத்துடனோ இருக்கக்கூடாது.

ஒரு மாணவன் தன் ஆசிரியர்களுக்குமுன் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் அமைதியாகவும் இருக்கவேண்டும். சிரிப்பது, இங்கும் அங்கும் பார்ப்பது, தேவையின்றி சைகைகளைச் செய்துகொண்டிருப்பது ஒரு மாணவனுடைய ஒழுக்கத்திற்குப் பறம்பானதாகும். இவ்வாறே, ஆசிரியர்களுக்கு முன் அமரும்போது சுத்தமாகவும் தூய்மையான ஆடைகளை அணிந்தும் ஒழுக்கத்துடனும் வரவேண்டும். எதுவும் கேட்கவேண்டுமானால் முதலில் அனுமதி பெறவேண்டும். இதுபோன்றே மாணவர்கள் ஒருவர் மற்றவரை கேலி செய்யக்கூடாது, அவர்களை இழிவுபடுத்தும் மற்றும் அவமதிக்கும் வகையிலான எந்த செயலையும் செய்யக்கூடாது. பரஸ்பர சகோரத்துவம், இரக்கம் மற்றும் கண்ணியமான முறையில் நடந்துகொள்ள வேண்டும்.

சிறப்பான முறையில் கல்வி கற்பதற்கு வகுப்பறைகளில் பிரகாசமும் சுற்றுச்சூழல் அமைதியானதாகவும் கூச்சல் குழப்பமுள்ள இடங்களிலிருந்து ஒதுங்கியும் இருக்கவேண்டும். மாணவர்கள் தம் படுக்கைகளில் உரையாடிக்கொண்டிருப்பதைத் தவிர்க்கவேண்டும், இதன் காரணமாக சோம்பலும் சுறுசுறுப்பின்மையும் உண்டாகும். ஒரு நல்ல, ஈடுபாடுள்ள மாணவன் தன்னுடைய புத்தகங்களையும் சீராகவும் சுத்தமாகவும் வைத்திருப்பான். புத்தகப்புழுவாக இருப்பதைவிட மாணவன் தன் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவேண்டும் மற்றும் புத்தகத்தை வாசித்து முடித்துவிடுவதற்குப் பதிலாக வாசகங்களைத் தகுந்த முறையில் ஆழ்ந்து கவனிக்கவேண்டும்.

* * *

www.uzalfalahi.com